முதலாவது கூடுதல் உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.

நாள். 05.03.2026

O.S No. 224/2018

வா.சா.1-லீலா

2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.

எனக்கு சொந்த ஊர் பொட்டல்குளம் ஆகும். அங்கு நான் தற்போது வசித்து வருகிறேன். நாகர்கோவிலில் எனக்கு வீடு கிடையாது. நான் சரோஜாவிற்காக சாட்சியம் அளிக்க வந்துள்னேன். சரோஜா லண்டனில் உள்ளார்.அவருக்கு 66 வயது ஆகும். எனக்கு சாட்சியம் அளிக்க 2025 நவம்பர் மாதத்தில் பவர் கொடுத்தார். லண்டனில் இருந்து அவர் வந்திருந்தார். அந்த பவர் பத்திரம் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரி. சரோஜாவின் வீட்டில் வைத்து என் முன்பாக பவர் பத்திரத்தில் கையொப்பம் செய்தார். சரோஜா எனக்கு அக்கா மகள் முறை ஆவார். என் அம்மா முறையில் உறவு முறை. என்னுடைய பவர்பத்திரத்தில் சரோஜா Uk ல் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு ஆங்கிலம் தெரியாது.

பவர்பத்திரத்தில் லண்டனில் இருந்து இங்கு வந்து பவர் எழுதியதாக சொல்லவில்லை என்றால் எனக்கு ஆங்கிலம் தெரியாது சரோஜா எனக்கு ஆங்கிலத்தில் உள்ள விவரத்தை சொன்னார். பவர்பத்திரத்தில் சரோஜா மட்டும் கையொப்பம் செய்தார் வேறு யாரும் சாட்சி கையொப்பம் செய்யவில்லை. உண்மையில் எனக்கு அதிகாரம் வழங்கவில்லை என்றாலும் என்னுடைய பவர்ஆவணம் போலியாக நாங்களாக உற்பத்தி செய்த ஆவணம் என்றாலும் சரியல்ல. சரோஜா பவர்பத்திரம் எழுத இங்கு வந்தார் என்பதை காட்ட எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. நான் சொல்லும் உறவு முறைக்கு ஏதாவது ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 2018 ல்இந்த வழக்கு செப்டம்பர் மாதத்தில் தாக்கல் செய்யப்பட்டது. எனக்கு பவர் கொடுத்த 2025 நவம்பர் க்கு முன்பு நடந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

வீட்டின் நம்பர் 61எ. மொத்த சென்ட் 6.04 ஆகும். அதற்கான ஆவணத்தை நான் பார்க்கவில்லை. சரோஜாவிற்கு பாத்தியபட்ட பாக ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்க்கவில்லை அவர்களிடம் தான் உள்ளது. வா.சா.ஆ.2 கிரய பத்திரத்தில் 6 சென்ட்க்கு சமமான 2613.6 ச.அடி என்று சொல்லப்பட்டுள்ளதென்றால் சரி. உண்மையில் 6 சென்ட் மட்டுமே பாத்தியம் என்றாலும் 6.04 சென்ட் பாத்தியம் இல்லை என்றால் சரியல்ல. 6 சென்ட்டில் 2 வீடுகள் உள்ளது. மேல்பக்கம் உள்ள கதவு எண் 62 பி. கீழ்பக்கம் 61எ ஆகும். சரோஜா யாரிடம் இருந்து சொத்தை கிரயம் வாங்கினார் என்றால் 2006ல் வாங்கினார் யாரிடம் இருந்து வாங்கினார் என்று தெரியாது. 62 பி யில் வாடகைதாரர்கள் குடியிருந்து வருகிறார்கள். 61எ வீடு காலியாக உள்ளது.

எனக்கு முன்பு பவர்தாரராக இருந்த ரகுஆனந்தராஜ் என் அம்மா வழியில் எனக்க உறவு முறை ஆவார். ரகுஆனந்தராஜ் தாக்கல்செய்த வழக்கில் நான் கையொப்பம் ஏதும் செய்யவில்லை அதனால் அந்த வழக்கின் விவரங்கள் எதுவும் எனக்கு தெரியாது. 2018ல் நடந்த காம்பவுண்ட் பிரச்சனைக்கு வழக்கு தாக்கல் செய்தார் .2018ல் நடந்த விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. உறவு என்பதால் நான் அடிக்கடி வழக்கு சொத்திற்கு வந்து செல்வேன் எனக்கு விவரங்கள் தெரியும். 2006ல் சரோஜா கிரயம் வாங்கியபோது வழக்கு சொத்திற்கு 4 பக்கங்களிலும் காம்பவுண்ட சுவர் எழுப்பினார். 1961ல் பிரதி வழக்கு சொத்தின் தெற்கே இடத்தை வாங்கி வீடு கட்டி குடியிருந்து வந்தார் என்றால் சரி. அவர் காம்பவுண்ட அமைத்திருந்தார் என்றால் சரியல்ல. சரோஜா காம்பவுண்ட அமைத்த பிறகு அவர் காம்பவுண்ட அமைத்தார்.

1ம் பிரதியின் பெயர் என்ன என்றால் லாசரஸ் என்று அழைப்பார்கள் எனக்க முழு பெயர் தெரியாது. வாதியின் தெற்கு பக்கம் கிழமேலாக பிரதி கட்டிய காம்பவுண்ட தான் இந்த

வழக்கின் தாவா. நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள புகைப்படத்தில் தெற்கு பக்கம் 2 காம்பவுண்ட சுவர் உள்ளது என்றால் சரியல்ல. 1 சுவர் மட்டுமே உள்ளது. தற்போது காட்டப்படும் புகைப்படத்தில் 2 சுவர்கள் உள்ளதென்றாலும் பிரதியின் சுவரில் மின்இணைப்பு வைத்துள்ளார்கள் என்றாலும் சரியல்ல. அந்த புகைப்படம் எனக்கு தெரியாது.வாதியின் சுவரில் பிரதி மின்இணைப்பு வைத்துள்ளார்.

புகைப்படத்தை தெரிந்து கொண்டே மறைத்து தெரியாது என்று பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. 29.10.2018 ல் நடந்த பிரச்சனைக்காக நான் காவல்நிலையம் சென்றேனா என்றால் நான் செல்லவில்லை. காவல்நிலையத்தில் புகார் அளித்ததற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. நீதிமன்ற ஆணையர்வழக்கு சொத்தை பார்வையிட்ட போது நான் உடன் இருந்தேன். நான் உடன் இருந்த விவரத்தை ஆணையர்சொல்லவில்லை என்றால் தெரியாது. ஆணையர் தாக்கல் செய்த புகைப்படத்திற்கு எதிராக நான் பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் அவர்களது சொத்தில் காம்பவுண்ட சுவர் கட்டி அதில் மின்மீட்டர் பொருத்தி உள்ளார்கள் என்றாலும் வாதியின் காம்பவுண்ட சுவர் தனி என்றாலும் சரியல்ல.

நான் உண்மைகளை மறைத்து ஸ்தலத்தில் உள்ளதற்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு கொடுத்த பவர் பத்திரம் செல்லாது என்றாலும் அதில் எனக்கு எந்த அதிகாரமும் வரவில்லை என்றாலும் சரியல்ல. கிரய ஆவணத்தின் அசல்பத்திரத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. இந்த வழக்கில் எனக்கு எந்த உரிமை இல்லை என்றாலும் வழக்கு தள்ளுபடி செய்யபட வேண்டும் என்றாலும் சரியல்ல.

(குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது)